# ACCOUNTING MODEL UNIT EXAM

| 33 | T | I,II |
|---|---|---|

UNIT EXAM NO :- 04/A/L/2020

அலகுப்பரீட்சை – வருமானக்கூற்றும், உற்பத்திக் கிரயக்கூற்றும்

BY :- Mr V.S.Kumaran B.Com (Asst) Spl
J/VAYAVILAN CENTRAL COLLGEG

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2020 ஆகஸ்ட்
General Certificate of Education (Adv.Level) Examination, August 2020

Accounting I II
கணக்கீடு I II

தேர்ச்சி 06, 07,

A/L 2020
அலகு மாதிரிப் பரீட்சை

இல 04

24.05.2020

2.00 மணி

Accounting Unit Exam

பகுதி I

Q1) கம்சன் நிறுவனத்தின் 2019/2020 நிதியாண்டிற்கான விற்பனை ரூ 183000 கொள்வனவு ரூ172000, உட்திரும்பல் (வெளித்திரும்பல் ரூ2000 கழித்து) ரூ 1000 உட்சுமைகூலி ரூ 5000 1.4.2019 இல் இருப்பு ரூ 42000
கிரயத்தின் மீது 20% இலாப எல்லையில் தொழிற்படுகின்றுது. எனின் 31.3.2020 இல் இருப்பின்பெறுமதி யாது?
1) ரூ 69000 2) 62000 3) ரூ 67000 4) ரூ 73000 5) ரூ63600

- ♣ சாம்சன் நிறுவனத்தில் 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான தேறிய விற்பனை ரூ 160000 தேறியகொள்வனவு ரூ 134000 இருப்பு அதிகரிப்பு ரூ 14000 ஆகும்.

**2, 3 ம் வினாக்களுக்கு விடை தருக.**

Q2) நிறுவனத்தினால் உழைத்துக்கொள்ளப்பட்ட மொத்தலாபம் யாது?
1) ரூ 40000 2) 30000 3) ரூ 50000 4) ரூ 70000 5) ரூ 80000

Q3) நிறுவனத்தின் இலாப எல்லை எத்தனைவீதம் ?

A கிரயத்தின் மீது 20%
B விற்பனை விலை மீது 25%
C கிரயத்தின் மீது 33 1/3 %
D விற்பனை விலை மீது 30%
இதில் சரியான கூற்று எது?/ எவை?

1) B மாத்திரம் 2) A யம் D யம்
3) D மாத்திரம் 4) B யும் C யும்
5) C மாத்திரம்

Q4) காந்தி நிறுவனத்தில் ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் ஒரு பகுதி பண்டங்கள் தீயினால் அழிவடைந்தது நிறுவனத்தின் கொள்வனவு 128000 விற்பனை 152000 உட்திரும்பல் ரூ 2000 வெளித்திரும்பல் ரூ 4000 சுமையிறக்கல்கட்டனம் ரூ 3000 இருப்பில் ஏற்பட்ட குறைவு ரூ 13000 விற்பனை மீது 20% இலாப எலலையில் தொழிற்படுகின்றது. அழிவடைந்த பொருளின்பெறுமதி யாது?

1) ரூ 10000 2) 20000 3) ரூ 30000 4) ரூ 40000 5) ரூ 50000

♣ *1/4/2019* இல் ஆண்டுக்கு 18000 வாடகைக்கு கட்டிடம் எடுக்கப்பட்டது. இவ்வாடகை *1/1/2020* இலிருந்து 24000 வாக அதிகரிக்கப்பட்டது. நிறுவன நிதியாண்டு *31/3* இல் நிறைவடைகின்றது *19/20* நிதியாண்டில் செலுத்தப்பட்ட வாடகை 21000 காசுக்கட்டுப்பாட்டுகணக்கிலிருந்து வாடகைக் கணக்கிற்கு வரவிடப்படது.

5, 6 ஆம் வினாக்களுக்கு விடை தருக

Q5) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருமானக்கூற்றில் காட்டப்படவேண்டிய வாடகைக் கணக்கு யாது?

1) ரூ 18000 2) ரூ 21500 3) ரூ 19000 4) ரூ 17500 5) ரூ 19500

Q6) 31.3.2020 இல் நிதிநிலைமைக்கூற்றில் காட்டப்படவேண்டிய மீதிகள் யாது?

1) அட்டுறு வாடகை ரூ 1500 2) முற்பன வாடகை ரூ 1500 3) அட்டுறு வாடகை ரூ 4500
4) அட்றுவாடகை ரூ 2500 5) முறபனவாடகை ரூ 3500

♣ இம்ரான் நிறுவனத்தின் ஏடுகளில் வருட இறுதியிலும், ஆரம்பத்திலும் காணப்படும் மீதிகள் வருமாறு.

| | 31.3.2020 | 31.3.2019 |
|---|---|---|
| அட்டுறு மின்சாரம் | 3000 | 1200 |
| முற்பன முதலீட்டு வருமானம் | 4000 | 2500 |

31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரிய மின்சாரச் செலவு ரூ 12800 இக் காலப்பகுதியில் காசாக பெறப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ 10500 ஆகும்.

7, 8 ம் வினாக்களுக்கு விடை தருக?

Q7) 31.3.2020 இல் முடிவடைந்த நிதியாண்டில் காசாக செலுத்தப்பட்ட மின்சாரத் தொகை யாது?

1) ரூ 13000 2) ரூ 13600 3) ரூ 14600 4) ரூ 11000 5) ரூ 12000

Accounting Unit Exam 04 . Mr. V. S. Thirukumaran

Q8) 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்குரிய வருமானக்கூற்றில் காட்டப்படவேண்டிய முதலீட்டுவருமானம் யாது?

1) ரூ 9000 2) ரூ 12000 3) ரூ 13000 4) ரூ 11000 5) ரூ 10000

Q9) 31.3.2020 இல் உள்ள இருப்பின் கிரயம் ரூ 48000 இதில் ரூ 8500 பழுதடைந்த பண்டங்கள் காணப்படுகின்றது. இதனை ரூ 3500 செலவில் பழுதுபார்க்கப்பட்டு ரூ 10000 பெறுமதியில்
இருப்புக்குள் எடுக்கப்பட்டது. இதன் தேறக்கூடிய பெறுமதி , இருப்புக் குறைவு நட்டம் முறையே
யாது?

1) ரூ 40500, ரூ 3500 2) ரூ 43000, ரூ 3000 3) ரூ 44000, ரூ 4000
4) ரூ 46000, ரூ 2000 5) ரூ 48000, ரூ 3000

Q10) Happy நிறுவனத்தின் ஏடுகளில் வருட இறுதியிலும் ஆரம்பத்திலும் காணப்படும் மீதிகள் வருமாறு.

| | 31.3.2020 | 31.3.2019 |
|---|---|---|
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு | 64000 | 58000 |
| அறவிடமுடியா ஐயக்கடன் ஒதுக்கீடு | ? | 2900 |

ஆண்டு காலத்தில் ரூ 8000 தொகை அறவிடமுடியாக்கடனாக பதிவளிக்கப்பட்டது. ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒரே வீதம் அறவிடமுடியா ஐயக்கடனுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதியில் வருமானக்கூற்றில் காட்டப்படவேண்டிய அறவிடமுடியா ஐயக்கடன்தொகை யாது?

1) ரூ 7700 2) ரூ 4800 3) ரூ 11200 4) ரூ 7200 5) ரூ 8300

- ராஜன் நிறுவனத்தின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்காக செலுத்தப்பட்ட தேறிய சம்பளம் ரூ 16200 ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10% மும் நிறுவனம் 15% மும் பங்களிப்பு செய்கின்றது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) நிறுவனம் 5% பங்களிப்பு செய்கின்றது. சம்பளம் மாதாந்தம் செலுத்தப்படுவதுடன். ஓவ்வொரு மாத EPF. ETF பங்களிப்பும் அடுத்துவரும் மாதமே செலுத்தப்படும்.

**11, 12 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

Q11) 31.3.2020 இல் முடிவடைந்த காப்பகுதிக்கான வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய ஊழியர் சார்பான மொத்தச் செலவு யாது?

1) ரூ 21600 2) ரூ 18000 3) ரூ 23500 4) ரூ 20500 5) ரூ 20500

Q12) 31.3.2020 இல் நிதிநிலைக்கூற்றில் காட்டப்பட வேண்டிய சென்மதி EFF சென்மதி ETF முறையே யாது?

1) ரூ 4500, ரூ 9000 2) ரூ 375, ரூ 75 3) ரூ 2700, ரூ 900
4) ரூ 450, ரூ 90 5) ரூ 1875, ரூ 125

Accounting Unit Exam 04 . Mr V.S. Thirukumaran

♣ சக்தி நிறுவனத்தின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| சம்பளம் (தேறியது) | 39600 | |
| ஊழியர் சேமலாபநிதியச் செலவு | 6600 | |
| ஊழியர் நம்பிக்கை நிதியச் செலவு | 2200 | |

ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10% மும் நிறுவனம் 15% மும் பங்களிப்பு செய்கின்றது. ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) நிறுவனம் 5% பங்களிப்பு செய்கின்றனர். ஒவ்வொரு மாத EPF. ETF பங்களிப்பும் அடுத்துவரும் மாதமே செலுத்தப்படும். 28.2.2020 இல் முடிவடையும் 11 மாதத்திற்குரிய சம்பளம் மாத்திரம் இவ்வாண்டில் செலுத்தப்பட்டுள்ளது. 2020 மார் மாத சம்பளம் செலுத்தப்படவுமில்லை, இதற்கான EPF. ETF பங்களிப்புக்கு ஏற்பாடு செய்யப்படவுமில்லை.

**13, 14, 15 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**

Q13) 31.3.2020 இல் முடிவடைந்த காப்பகுதிக்கான வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய ஊழியரது மொத்தச சம்பளம் யாது?

1) ரூ 36000 2) ரூ 43200 3) ரூ 40000 4) ரூ 48000 5) ரூ 44600

Q14) 31.3.2020 இல் முடிவடைந்த காப்பகுதிக்கான வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய ஊழியர் சார்பான மொத்தச் செலவு யாது?

1) ரூ 48000 2) ரூ 57200 3) ரூ 51500 4) ரூ 53500 5) ரூ 57600

Q15) 31.3.2020 இல் நிதிநிலைக்கூற்றில் காட்டப்பட வேண்டிய சென்மதி யாது?

1) ரூ 4000 2) ரூ 4500 3) ரூ 5200 4) ரூ 4600 5) ரூ 4800

Q16) ராம்கி நிறுவனத்தின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான மொத்தவிற்பனை மொத்த கொள்வனவு முறையே ரூ 184000 , ரூ 138000 1.4.2019 இல் VAT கணக்கு செலவு மீதி ரூ 4000 செலுத்திய VAT ரூ 8000 விற்பனை கொள்வனவுகள் யாவும் 15% பெறுமதி சேர் வரியை உள்ளடக்கியுள்ளது. எனின் 31.3.2020 இல் VAT கணக்கு மீதி யாது?

1) ரூ 4000 செலவு 2) ரூ 10000 வரவு 3) ரூ 10000 செலவு
4) ரூ 2000 செலவு 5) ரூ 2000 வரவு

Q17) நந்தி நிறுவனத்தில் ஆண்டுகாலத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் ரூ 5000 பண்டங்கள் தீயினால் அழிவடைந்தது நிறுவனத்தின் கொள்வனவு 128000 விற்பனை 123000 உட்திரும்பல் ரூ 3000 வெளித்திரும்பல் ரூ 2000 சுமையிறக்கல்கட்டனம் ரூ 3000 விற்பனை மீது 20% இலாப எல்லையில் தொழிற்படுகின்றது. இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது குறைவு யாது?

1) ரூ 28000 அதிகரிப்பு 2) ரூ 228000 குறைவு
3) ரூ 24000 குறைவு 4) ரூ 24000 அதிகரிப்பு 5) ரூ 12000 அதிகரிப்பு

Accounting Unit Exam 04 Mr V.S. Thirukumaran

Q18) வரையறுத்த சிங்கர் கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான தகவல்கள் வருமாறு.
மூலப்பொருள் கொள்வனவு ரூ 184000
நேர்கூலி ரூ 18000
உற்பத்தி மேந்தலை ரூ 24000
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 12000
குறைவேலை இருப்பில் ஏற்பட்ட குறைவு ரூ 6000
31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான உற்பத்திக் கிரயம் யாது?

1) ரூ 226000 2) ரூ 214000 3) ரூ 220000 4) ரூ 208000 5) ரூ 224000

Q19) வரையறுத்த சேயோன் கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான தகவல்கள் வருமாறு.
உற்பத்திக் கிரயம் ரூ 240000
நேர்கூலி ரூ 15000
உற்பத்தி மேந்தலை ரூ 24000
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 15000
குறைவேலை இருப்பில் ஏற்பட்ட குறைவு ரூ 10000
31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான மூலப்பொருள்கொள்வனவு யாது?

1) ரூ 206000 2) ரூ 226000 3) ரூ 208000 4) ரூ 216000 5) ரூ 224000

- ♣ வரையறுத்த ரமணி கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான தகவல்கள் வருமாறு.
  20, 21 ம் வினாக்களுக்கு விடை தருக.

விற்பனைக் கிரயம் ரூ 274000
மொத்த மேந்தலை ரூ 38000
காலக்கிரயம் ரூ 18000
நேர்கூலி ரூ 20000
உட்சுமைகூலி ரூ 6000
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 15000
குறைவேலை இருப்பில் ஏற்பட்ட குறைவு ரூ 10000
முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 12000

Q20) 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான உற்பத்திக் கிரயமும், மூலக்கிரயமும் யாது?

| | உற்பத்திக் கிரயம் | மூலக்கிரயம் |
|---|---|---|
| 1) | ரூ 286000 | ரூ 276000 |
| 2) | ரூ 236000 | ரூ 256000 |
| 3) | ரூ 242000 | ரூ 296000 |
| 4) | ரூ 286000 | ரூ 256000 |
| 5) | ரூ 286000 | ரூ 238000 |

Accounting Unit Exam 04 . Mr V.S. Thirukumaran

Q21) 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பயன்படுத்திய மூலப்பொருள் கிரயமும், மூலப்பொருள் கொள்வனவும் யாது?

| | பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் | மூலப்பொருள்கொள்வனவு |
|---|---|---|
| 1) | ரூ 256000 | ரூ 275000 |
| 2) | ரூ 236000 | ரூ 245000 |
| 3) | ரூ 246000 | ரூ 255000 |
| 4) | ரூ 226000 | ரூ 256000 |
| 5) | ரூ 232000 | ரூ 238000 |

Q22) வரையறுத்த ராஜன் கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான தகவல்கள் வருமாறு.

பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் ரூ 162000
நேர்கூலி ரூ 12000
விற்பனைக் கிரயம் ரூ 242000
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 10000
குறைவேலை இருப்பில் ஏற்பட்ட குறைவு ரூ 12000
முடிவுப்பொருளில் ஏற்பட்ட குறைவு ரூ 8000

31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான உற்பத்தி மேந்தலை யாது?

1) ரூ 40000 2) ரூ 56000 3) ரூ 60000 4) ரூ 32000 5) ரூ 48000

♣ வரையறுத்த சிராணி கம்பனியின் 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான தகவல்கள் வருமாறு.
23, 24, 25 ம் வினாக்களுக்கு விடை தருக.

விற்பனை ரூ 400000
மொத்த மேந்தலை ரூ 35000
காலக்கிரயம் ரூ 12000
நேர்ச் செலவு ரூ 30000
உட்சுமைகூலி ரூ 4000
மூலப்பொருள் வெளித்திரும்பல் ரூ 3000
மூலப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 18000
குறைவேலை இருப்பில் ஏற்பட்ட குறைவு ரூ 12000
முடிவுப்பொருள் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ 10000
விற்பனை மீது 20% மொத்தலாபம் உழைக்கப்படுகின்றது.

Q23) 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான விற்பனைக் கிரயமும், உற்பத்திக்கிரயமும் யாது?

| | விற்பனைக் கிரயம் | உற்பத்திக் கிரயமும் |
|---|---|---|
| 6) | ரூ 280000 | ரூ 290000 |
| 7) | ரூ 360000 | ரூ 350000 |
| 8) | ரூ 320000 | ரூ 310000 |
| 9) | ரூ 360000 | ரூ 370000 |
| 10) | ரூ 320000 | ரூ 330000 |

Accounting Unit Exam 04 . Mr V.S. Thirukumaran

Q24) 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான பயன்படுத்திய மூலப்பொருள் கிரயமும், மூலப்பொருள் கொள்வனவும் யாது?

| | பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம் | மூலக்கிரயமும் |
|---|---|---|
| 1) | ரூ 265000 | ரூ 295000 |
| 2) | ரூ 265000 | ரூ 255000 |
| 3) | ரூ 245000 | ரூ 275000 |
| 4) | ரூ 256000 | ரூ 296000 |
| 5) | ரூ 264000 | ரூ 294000 |

Q25) 31.3.2020 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான மூலப்பொருள்கொள்வனவு யாது?

1) ரூ 292000 2) ரூ 236000 3) ரூ 282000 4) ரூ 280000 5) ரூ 254000

Accounting Unit Exam 04 . Mr .V. S. Thirukumaran

## பகுதி II

**வினா இல 01**

1.3.2019 இல் ரூ 300000 தொகையை மூலதனமாக இட்டு ஆரம்பிக்கப்பட்ட சாது நிறுவனத்தின் மார்ச் மாதத்திற்கான தகவல்கள் வருமபறு

**காசுப் பெறுவனவு**

| | | |
|---|---|---|
| காசு விற்பனை | 124000 | |
| கடன்பட்டோரிடம் பெற்றது | 146000 | |
| விற்பனைக்காக பெறப்பட்ட முற்பனம் | 45000 | 315000 |

**காசுப் கொடுப்பனவு**

| | | |
|---|---|---|
| மூலப்பொருள்கொள்வனவு | ரூ 85000 | |
| கடன்கொடுநருக்கான கொடுப்பனவு | ரூ 115000 | |
| நேர்கூலி | ரூ 24000 | |
| மூலப்பொருள் கொள்வனவுக்கான முற்பனக்கொடுப்பனவு | ரூ 60000 | |
| விநியோகச் செலவு | ரூ 8000 | |
| தொழிற்சாலை வாடகை | ரூ 12000 | |
| தொழிற்சாலை மின்சாரம் | ரூ 10000 | |
| 15..3..2019 பொறி இயந்திரக்கொள்வனவு | ரூ80000 | 314000 |

**ஏனைய தகவல்கள்**

1. மார்ச் மாதத்திற்கான மூலஏடுகளின் மொத்தம் வருமாறு
   மூலப்பொருள் கொள்வனவு ரூ 112000
   விற்பனை நாளேடு ரூ 162000
   உட்திரும்பல் நாளேடு 4000
   வெளித்திரும்பல் நாளேடு 5000
2. 31.5.2019 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு செலுத்தப்பட்ட தொகையை வாடகை குறிக்கும்.
3. முற்பன விற்பனை தொடர்பில் இம் மாதத்தில் ரூ 30000 பெறுமதியான பொருட்கள் மாத்திரம் வழங்கப்பட்டதுடன் மூலப்பொருள் முற்பனக்கொடுப்பனவில் ரூ 50000 மூலப்பொருட்கள் மாத்திரம் இம்மாதத்தில் பெறப்பட்டது.
4. பொறியின் இழிவுப் பெறுமதி ரூ 8000 பயனுள்ள ஆயட்காலம் 6 வருடம்
5. மார்ச் மாதத்திற்காக ஏப்பரல் 10ம் திகதி கிடைக்கப் பெற்ற மின்சாரப்பட்டியல் ரூ 12000
6. கடன்பட்டோரிடம் பதிவளித்த தொகை ரூ 6000
7. 31.3.2019 இல் மீதிகள்
   மூலப்பொருள் ரூ 48000
   முடிவுப்பொருள் ரூ 36000
   குறைவேலை ரூ 18000

**வேண்டப்படுவது**

1. பின்வரும் பேரேட்டுக் கணக்குகள்
   விற்பனை கணக்கு, கொள்வனவுக் கணக்கு கடன்பட்டோன் கணக்கு கடன்கொடுநர் கணக்கு முற்பன விற்பனை பெறுவனவு கணக்கு, முற்பன கொடுப்பனவு கணக்கு
2. 2019 மார்ச் மாதத்திற்கான உற்பத்திக் கணக்கு
3. 2019 மார்ச் மாதத்திற்கான வருமானக்கூற்று
4. 31.3.2019 இல் நிதி நிலைமைக்கூற்று

**( 30 புள்ளிகள்)**

Accountingunit Exam 04 . Mr .V. S. Thirukumaran

**வினா இல 02**

ஆடை உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் கம்சன் நிறுவனத்தில் 31/3/2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான தகவல்கள்.

| | |
|---|---|
| 1/4/2018 இல் இருப்பு துணிகள் 500M | 45000 |
| முடிவடைந்த ஆடை (180 அலகு) | 36000 |
| துணிக் கொள்வனவு (1200M) | 108000 |
| உள்வந்த வண்டில் கூலி | 2800 |
| தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் | 5200 |
| நேர்கூலி | 6800 |
| தொழிற்சாலை காப்புறுதி | 3200 |
| உற்பத்தி மீதான தனியுரிமை கட்டனம் | 2100 |
| இயந்திர பழுதுபார்த்தல் | 4800 |
| துணி வெளித்திருப்பம் (100M) | 9000 |
| 31/3/2019 இருப்பு துணிகள் 250M | 22500 |
| 31/3/2019 முடிவடைந்த ஆடை (100 ஆடைகள்) | ? |

முடிவடந்த நிதியாண்டில் 150M துணிகள் களவாடப்பட்டன ஒருசட்டையை உற்பத்தி செய்வதற்கு 3M துணி பயன்படுத்தப்படும். 31/3/2019 இல் உள்ளவாறான ஆடைகள் முழுவதும் நிதியாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளை மாத்திரம் உள்ளடக்கியுள்ளது. உற்பத்திசெய்யப்படும் அலகு ஒன்றிற்கு ரூபா 6 தனியுரிமைக் கட்டணமாக வழங்கப்படும்.

**வேண்டப்படுவது**

1. **உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளின் எண்ணிக்கை**
2. **நுகரப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம்**
3. **மூலக்கிரயம்**
4. **மொத்த உற்பத்திக் கிரயம்**
5. **பின்வரும் *அடிப்படைகளில்* ஆடைகளின்** , இறுதி இருப்பு
   - அ) **முதற் கிரயத்தில்**
   - ஆ) **மொத்த உற்பத்திக் கிரயத்தில்**

**( 20 புள்ளிகள்)**

Accounting Unit Exam 04 Mr .V. S. Thirukumaran